Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 2, No.1, 2021, (14-25).

# பெண்ணிய நோக்கில் புறநானூற்று மகட்பாற்காஞ்சிப் பாடல்கள்

## Hymns of *makatpaarkaanji* in *Puranaanooru- A* Feministic Perspective

**S.Kanmani Ganesan**

**Former Principal & HOD in Tamil, Srikaliswari College, Sivakasi. India**

**Kanmanitamilskc@gmail.com**

**Received:** 01 March 2021; **Accepted:** 26 April 2021; **Published:** 04 May 2021

**To cite this article (APA):** Ganesan, S. K. (2021). பெண்ணிய நோக்கில் புறநானூற்று மகட்பாற்காஞ்சிப் பாடல்கள். *Journal of Valartamil*, *2*(1), 14-25. https://doi.org/10.37134/jvt.vol2.1.2.2021

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol2.1.2.2021

**ஆய்வுச்சாரம்:** புறநானூற்று மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் தோன்றிய காலகட்டத்தில் மகளிர், பெண் பிள்ளைகளின் நிலை என்ன எனக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். பெண்ணியக் கோணத்தில் அமையும் இக்கட்டுரைக்கு மகட்பாற்காஞ்சித் துறை சார்ந்த இருபது புறப்பாடல்கள் முதல்நிலைத் தரவுகளாகவும் பிற தொகைநூற் பாடல்கள், ஆய்வாளர் கூற்றுகள் ஆகியன இரண்டாம்நிலைத் தரவுகளாகவும் அமைகின்றன. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் பெண் பாதுகாப்புத் தொடர்பாக நிகழ்ந்த தவிர்க்க இயலாத சிக்கலின் வெளிப்பாடாக இப்பாடல்கள் தோன்றி உள்ளன எனத் தெரிகிறது. சமூக வரலாற்றில் இருந்து பிரிக்க இயலாத; பெண்களைப் பாதுகாக்க வேண்டிய நிலை தமிழக வரலாற்றை அறிய உதவுகிறது.

**கருச்சொற்கள்:** மகட்பாற்காஞ்சி, புறநானூற்றில் பெண்ணியம், குறுநிலமன்னரும் மகள்களும், வேந்தனும் பெண்ணும், பெண்ணும் போரும், பெண்ணின் பாதுகாப்பு.

**Abstract:** The aim of this research article is to bring to the fore the status of women and girl children in the early Tamil society by studying the hymns of *makatpaarkaanji* in *Puranaanooru.* A feministic approach is followed. Those twenty hymns of *Puranaanooru* which belong to the specific division *makatpaarkaanji* serve as the primary source. The other hymns of the anthologies and the statements of researchers serve as the secondary source. It's brought out that the unavoidable pain and agony regarding the safety of girls during the early historical age was the reason for the creation of these hymns. We could see the socialistic elements intermingled and inseparable; thereby the history of the early Tamils is revealed.

**Keywords:** *makatpaarkaanji*, feminism in *Puranaanooru*, daughters and petty chieftains of Tamilnadu, women and *venthar*, women and safety, women and war.

## அறிமுகம்

புறநானூற்று மகட்பாற்காஞ்சிப் பாடல்களைப் பெண்ணியக் கோணத்தில் கண்டு அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்ணின் நிலை என்ன என வெளிக் கொணர்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். தமிழக வரலாற்று நூல்களில் பண்டைத் தமிழ்ச் சமூக வரலாறு முழுமையாக இடம் பெறவில்லை. அன்றைய சமுதாயத்தில் பெண் பெற்ற இடம் என்ன என்று அறிந்து கொண்டால் அக்காலச் சமூக வரலாற்றை முழுமையாக வரையலாம்.

## ஆய்வு முன்னோடிகள்

க.கைலாசபதி மகட்பாற் காஞ்சிப் பாடல்களைப் பற்றி “அழிவும் ஆக்கமும்” என்ற கட்டுரையில் (1999) வீரயுகக் காலப் புலவர் மனப்பாங்கோடு தொடர்புபடுத்திப் பேசுகிறார். அரங்க மல்லிகா 'பெண்ணின் வெளியும் இருப்பும்' என்ற நூலில் (2008) ஔவையின் ஆளுமை குறித்தும் பெண்மொழியின் வீரியம் குறித்தும் விளக்குவது மகட்பாற்காஞ்சித் துறையில் பாடிய பெண்பாற் புலவர் மொழியைப் புரிந்துகொள்ள உதவுகிறது. ம.உஷாராணி “அள்ளூர் நன்முல்லையார் பாடல்கள் காட்டும் சங்ககால மகளிர் நிலை” பற்றிய ஆய்வில் பெண்மொழியின் சிறப்பை எடுத்துக் கூறும்போது; அவரது மகட்பாற்காஞ்சித் துறைப் பாடல் தொடர்பாகக் கருத்துரைக்கிறார் (2020). சங்ககாலப் பெண்களிடம் இருந்த தன்னுரிமை பற்றிப் பெண் படைப்பாளர் பாடல்கள் மூலம் S.குமரன் "சங்க இலக்கியத்தில் தன்னுரிமைப் பெண்கள்" என்ற கட்டுரையில் நிறுவுகிறார் (2016). எஸ். கண்மணி என்பவரின் 'மகட்பாற்காஞ்சிப் பாடல்கள்- ஒரு பகுப்பாய்வு' என்ற கட்டுரை தமிழ்ப்பேராய்வு மின்ஆய்விதழில் உள்ளது (ஜூலை 2019).

## ஆய்வுத் தரவுகள்

மகட்பாற்காஞ்சிப் பாடல்களைப் பெண்ணிய நோக்கில் ஆராய, மேற்சுட்டிய துறை சார்ந்த இருபது புறப்பாடல்கள் (336-355) முதல்நிலைத் தரவுகளாம்; பிற தொகையிலக்கியத் தரவுகளும் ஆய்வாளர் கருத்துகளும் இரண்டாம்நிலைத் தரவுகளாம்.

## பகுப்பாய்வு முறை

## வாழ்வின் இருநிலை சார்ந்த பெண்கள்

இருபது பாடல்களிலும் இடம்பெறும் பெண்டிர் தாய், மகள் என வாழ்வின் இருநிலையினராவர். மகள் பாதுகாக்கப்பட வேண்டியவளாக இருந்தாள்.

## தாய்நிலையில் பெண்

அன்புத்தொல்லை கொடுப்பவளாயினும்; மகளின் வாழ்வு பற்றி முடிவெடுப்பதில் தாய் தன்னுரிமையுடன் இருந்தாள். பாலைக் கையிலெடுத்துக் கொண்டு மகளிடம் உண்ணச்சொல்லி வற்புறுத்தி; 'நீ வயிறு நிறைந்ததா இல்லையா என்று அறிய இயலாதவள்' என்கிறாள் தாய். அனிச்சையாக; அதாவது இயற்கையாக உணரக் கூடியதை; இளமைக்குரிய அறியாமை எனப் பொருட்படுத்திப் 'பிறங்கிலை' என்று சொல்லி; அன்புத்தொல்லை கொடுப்பவளாகத் தாய் அமைகிறாள் (புறம். பகுதி II, 2007. ப.292-293, பா346).

தன் மகளை வேந்தன் பெண் கேட்ட போது அதைத் தானும் துணிந்து எதிர்த்த தாய் பற்றிப் பரணர் ஏசுவதைக் காண்கிறோம். மகட்கொடை மறுப்பதால் ஊருக்கு ஏற்படவிருக்கும் அழிவை இவன் மனைவியும் எண்ணிப்பாராமல்; இப்படி எதிர்க்கிறாளே; 'அறனிலள் மன்ற தானே… பகைவளர்த்து இருந்த இப்பண்பில் தாயே' எனப் புறம்.336ல் தாயைக் குற்றம் கூறுகிறார் புலவர். வேந்தன் சினம் கொள்ள; யானைப்படை முன்னேறி வந்து விட்டது. பெண்ணைக் கொடுத்துச் சிக்கலைத் தீர்க்காமல்; வாய்திறவா மறவரோடு சேர்ந்து பகையை முற்ற விடுகிறார்கள் என்ற நிகழ்வுப் புனைவில் தாயின் செய்கையே பெரிதும் விதந்து பேசப்படுகிறது. மகளின் வாழ்க்கை பற்றிய முடிவை எடுப்பதில் தாய் பேரிடம் வகித்தாள் எனத் தெரிகிறது.

## மணவினைக்குரிய பெண்ணின் வயது

புறப்பாடல்களில் மணவினைக்குக் கேட்கப்படும் பெண்கள் விளையாட்டுப் பருவத்திலிருந்து; மங்கைப்பருவம் வரை பல வயதினர் ஆவர். நச்சு நிறைந்த குன்றிமணிகளின் கரும்பொறிகள் பொருந்திய சிவந்த வண்ணத்தில் மயங்கி; அவற்றை ஓடிஓடிப் பொறுக்கி விளையாடும் பெதும்பைப் பருவத்துப் பெண்ணை மணக்க விரும்பிப் புறம்.340ல்; 'யார்மகள் கொல் என வினவு'ம் வீரனைக் காண இயல்கிறது. தன் கையில் பாலை எடுத்துக் கொண்டு உண்ணச் சொல்லித் தாய் வற்புறுத்தக் கூடிய இளம்பெண்ணைத் தரும்படிக் கேட்டவனை புறம்.346 காட்டுகிறது. ‘கோங்கின் முகை வனப்பு ஏந்திய முற்றா இளமுலைத் தகை’யாகிய பதின்மவயதுப் பெண்ணை மணம் முடிக்கக் கேட்பதைப் புறம்.336ல் அறிகிறோம். புறம்345ல் கருத்தைக் கவர்ந்த பெண்; ‘நெருங்கல் வெம்முலை மையல் நோக்கு’ உடையவள் ஆதலால்; மங்கைப் பருவத்தினள் ஆவாள்.

## வேளிரும் மகள்களும்

தன்னைச் சமமாக மதித்து நடப்பவனுக்கே மகளை மணமுடித்துக் கொடுக்க வேண்டும்; வேந்தனேயானாலும் பொருத்தமில்லா வயோதிகனுக்குப் பெண் கொடுக்கக் கூடாது; உயிரே போனாலும்; ஊரே அழிந்தாலும்; வேந்தன் எவ்வளவு பரிசம் கொடுத்தாலும்; விட்டுக்கொடுக்கக் கூடாது என்ற நெஞ்சுரம் கொண்டவராகத் தந்தையரும் தமையரும் உள்ளனர். மகட்கொடை மறுத்தவர் 70% வேளிர் ஆவர் (கண்மணி கணேசன், ஜூலை 2019).

தன்னைத் தாழ்வாக எண்ணும் வேந்தனுக்கு மகளைக் கொடுப்பது; அவளைத் துன்பநிலைக்குத் தள்ளுவதாக அமையும் என்ற எண்ணம் குறிப்பாகப் புலப்படுகிறது. ‘தன் தக வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்’ எனப் புறம்.338ல்; கடல்போன்ற கழனிக்கு நடுவே கப்பலைப் போன்ற எயிலுடன் கூடிய மாளிகை வாழ்க்கை உடைய வேள் மறுப்பதன் காரணம் குறிப்பாகப் புரிகிறது. பொருத்தம் இலாதார்க்குப் பெண் கொடுப்பதில்லை எனும் கொள்கையை 'நிரல் அலார்க்குத் தரலோ இல்' என்ற புறம்.345ன் அடியும் தாங்கி நிற்கிறது. இக்கொள்கையின் அடிப்படைக் காரணம் திருமணத்திற்குப் பின் எழக்கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதாகும். ஒப்ப மதிக்காதவனுக்குப் பெண் கொடுத்தால் பின்னர் மகளோடு குடும்பஉறவில் விரிசல் நேர்வது உலகாய உண்மை ஆகும்.

மகட்கொடை மறுத்து முதல்நாள் போரிட்டுப் பெற்ற புண்ணுடன்; அது ஆறும் முன்னர் மீண்டும் போருக்குத் தயாராகும் தலைவனைப் பரணர் காட்டுகிறார். தன் உடல்நோவைப் பற்றிய கவலை ஏதுமின்றித் தன்னைச் சார்ந்த மக்களைத் தயார்நிலைப்படுத்தும் தந்தையைப்; புறம்.341ன் அடிகள் காட்டுகின்றன. பூக்கோள் விழாவை அறிவித்துக் குளநீராடச் சென்றமை வேந்தனுக்கு எதிராகத் தொடரவிருக்கும் போரின் வேகத்தைக் காட்டுகிறது. புறப்படுமுன் தெய்வத்தை வழிபட; நீராடச் செல்கிறான். போருக்குரிய அடையாளப் பூவைச் சேகரிப்பது போரின் முதனிலை நடவடிக்கைகளில் ஒன்று. வேந்தனுக்குப் பெண்கொடுத்துக் குடும்பவாழ்வில் உறவுகளிடையே இடர் மீக்கூரும் நிலை ஏற்படுவதற்கு வழி வகுக்காமல் போரைத் தேர்வு செய்கிறான். உயிரே போனாலும் மனத்தை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லாத திட்பம் உடையவனாகக் காணப்படுகிறான். ஊர் அழியும் எனத் தெரிந்தாலும் மகளைக் கொடுக்க மறுக்கும் தந்தை, ‘மென்புல வைப்பின் தண்பணை’யால் அடையாளம் தெரிகிறான். மென்புலம் நன்செயையும்; தண்பணை நீர்வளத்தையும் குறிப்பதால் தந்தை வேளாண்மை செய்யும் குறுநில மன்னன் ஆகிறான்.

மன்னன் மகளை ‘யார்மகள்?’ என்று கேட்ட தலைமை சான்ற வீரனுக்குப் பதிலுரைக்கும் புலவர் அவளது தந்தையும் தமையரும் கிழட்டு வேந்தனுக்கு மகள்மறுத்து; எதிர்த்து விழுப்புண்கள் ஏற்றவர் என்பதைத் ‘தொல்குடி மன்னன் மகளே முன்னாள் கூறிவந்த மாமுது வேந்தர்க்கு’ என புறம்.353ல் வெளிப்படையாகச் சொல்கிறார். வேந்தன் தரவிருந்த ‘நிறைசால் விழுப் பொருளை’ வேண்டாம் என மறுத்த மன்னனைப் புறம்.344 காட்டுகிறது. புறம்.345லும் செல்வம் வேண்டாம் என்று மறுத்துப் போர் செய்யச் சித்தமாகிறான் நீர்வளம் மிகுந்த ஊரின் மன்னன்.
பெண் கேட்பவன் கற்றவனுக்கேற்ற நாகரிகத்தொடு நடந்து கொள்ளவில்லை எனும் தொனியோடு 'கல்வியென்' என்று தன்னைப் பற்றிப் பேசுகிறான் தமையன். அவனது தந்தை உயிரோடிருந்தபோது போரில் உயிரை விட்டவர் தவிர, பிற அனைவரையும் தன் உறவினர் போல் பாதுகாத்தவன் ஆவான். பாடலின் போக்கு அவனது தந்தை மகன்மறுத்த போரில் தான் உயிரை விட்டானோ என்றெண்ண வைக்கிறது. ஊர் பாழாகத் தங்கையின் நலன் காரணமாகி விட்டதைக் கூறி நொந்து; அழிவைத் தெரிந்தே போர்செய்யத் துணியும் நிகழ்ச்சி புறம்.346ல் உள்ளது.

தொகையிலக்கியம் ஆண்முதன்மைச் சமுதாயத்தில்; தந்தைக்கும் மகளுக்கும் இடையிலான பாசப் பிணைப்பை வாழ்வின் பிற நிலைகளிலும் காட்டுகிறது. குடும்பத்தில் பெண்குழந்தை போற்றப்பட்டது. திருமணமாகும்

வரை தலைவிக்குரிய அதிகாரபூர்வ அடையாளம் தந்தையாகவே இருந்தான். தந்தை மகளுக்கு இடையிலான பந்தம் மகளது இல்லற வாழ்விலும் தொடர்ந்தது.

மகள் நடந்தால் கூடத் தாங்காது; 'தரையில் நடக்காதே; கால்கள் சிவந்து விடும்' என்று அங்கலாய்க்கும் தந்தையின் இயல்பான அன்பின் ஈர்ப்பைத் தோழி உரைக்கிறாள் (அகம். களிற்றியானை நிரை, 2009. ப.42-43, பா12). மகளுக்கு ஊட்டும் போது கூடத் 'தந்தை பங்கிற்கு இதை உண்' என்று வற்புறுத்துகிறாள் தாய் (அகம்.மணிமிடை பவளம், 2007. ப.233-234, பா219). பெண்குழந்தை போற்றப்பட்டமை உறுதி. தந்தை மகளைக் காத்து நிற்பதே தலையாய கடப்பாடு எனக் கருதினான். அகம்.17ல் அமைந்துள்ள 'நெடுமொழித் தந்தை அருங்கடி' என்ற தாயின் வாய்மொழியில் தந்தையின் சொல்லுக்கு இருந்த மதிப்பும் மகளை அவன் காத்த பொறுப்பும் ஒருங்கு புலப்படுகின்றன. தலைவியது ஊரைக் ‘கவின்பெறு சுடர்நுதல் தந்தை ஊரே’ எனத் தலைவன் சொல்வது; (ஐங்குறுநூறு, 2009. ப.139-141, பா94) தலைவிக்குரிய அடையாளம் தந்தை என்றமைகிறது.

திருமணவாழ்வில் கணவனின் குடி வறுமையுற்றால் தந்தை தன் வளத்தைக் கொடுத்தனுப்பித் தாங்க முனைகிறான் (நற்றிணை, 2007. ப.137-138, பா110) கணவன் புறத்தொழுக மனம் நொந்து மெலிந்தவளைப் பற்றித் தோழி ‘இவள் தந்தையும் தமையரும் மிக்க சினமும் செயல் வேகமும் கொண்டவர்கள். இப்போது அவன் புறத்தொழுகும் செய்தி தெரிந்தால் என்ன ஆகும்?' என்று (நற்றிணை127) சற்றே மிரட்டும் தொனியில் பேசுவது குடும்பத்தில் தந்தை மகளுக்கு இடையே வாழும் வரை தொடர்ந்த பந்தத்தை உணர்த்துகிறது.

## புலவோர், ஊரார் கோணத்தில் பெண்

மகட்பாற்காஞ்சிப் பாடல்களைப் பாடிய புலவோருள் அள்ளூர் நன்முல்லையார் மட்டுமே பெண்பாற் புலவர் ஆவார். அவரே ‘மகளது திருமணம் மூலம் சொந்தத்தைப் பெருக்கி வேளாண்மையில் பாதுகாப்பை மேம்படுத்த மன்னன் முனைவதாகப் பாடுகிறார். பெண்ணின் வாழ்வு பற்றிய கவலை ஏதுமின்றி ஊரழிவு பற்றி மட்டுமே பேசும் பரணர் ஆணாதிக்கத்தின் பிரதிநிதியாகத் தெரிகிறார். ஊரார் வாய்மொழியில் பெண் அணங்காகிறாள்.

ஆவல்மீதூரப் பெண்ணைப் பற்றிக் கேட்பவனிடம் அவளது தந்தை பற்றி அறிவுறுத்தும் புலவர், வேந்தனின் யானையைச் செறுவிலிருந்து வெளியேற்றும் துணிவும் வீரமும் பொருந்திய இன்னொரு மன்னனுக்கே தன் மகளை மணமுடித்துக் கொடுப்பான் என்கிறார் (புறம்.340). இச்செய்தி தொகையிலக்கியக் காலச் சமூகநிலையுடன் தொடர்புறும் பெண்ணின் நிலைக்குரிய விளக்கத்தைக் கொடுக்கிறது. குறுநில மன்னன் இன்னொரு வீரம் பொருந்திய மன்னனுக்கே மகட்கொடை நேர்வான் எனும் முடிவு அக்காலத்தில் சாதிவேறுபாடு தலைதூக்கத் தொடங்கி விட்டதைக் காட்டுகிறது. இவ்வேறுபாடு பெண்ணின் திருமணத்தை அடிப்படையாகக் கொண்டு நிலைபெற்றது என்றும் தெரிகிறது. வேளாண்மையில் புலத்தைக் காவல் காப்பதற்கு மிகுந்த சவால்களைச் சந்தித்த நிலை வெளிப்படை. சிக்கலைச் சமாளிக்கப் பெண்ணைத் தம் இனத்துள் கொடுத்துப் பாதுகாப்பை மேம்படுத்த எண்ணும் போக்கு அன்றைய வேளாண்மைச் சமுதாயத்தில் இருந்தமை இப்பாடலில் பதிந்துள்ளது. 'பெண்கள் தம்மைப்பற்றித் தாமே எழுதும்போது சமூகத்தின் ஊடுபாவுத் தோற்றம் அசலாகவும் அழுத்தமாகவும் தெரியும்' எனல் இங்குப் பொருந்துகிறது (உஷாராணி, 2020. அள்ளூர் நன்முல்லையார் பாடல்கள் காட்டும் சங்ககால மகளிர்நிலை, https://www.geotamil.com/index.php?option=com_content&view=category&id=65:2014-11-23-05-26-56&layout=blog&Itemid=82).

வேந்தனால் 'ஊர்கவின் அழிப்பவும்' தலைவியின் மணவினைக்குத் தந்தை மறுத்துத் தன் வேலை நீர்ப்படை செய்கிறான் என்று அழிவு பற்றி மட்டுமே எண்ணமுடையவராகப் பரணர் புறம்.336&354 பாடல்களில் தோன்றுகிறார். 'வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பார்க்கும் பெண்ணின் கோணம் ஆண்களின் கோணத்தில் இருந்து வேறுபட்டது' என்ற கருத்துக்கு (பஞ்சாங்கம், 1994) ஏற்ற சான்றாக இருவரது பாடல்களும் அமைந்துள்ளன. ஊருக்குத் அழிவைக் கொண்டு வந்த அணங்கு என புறம்.349ல் பொதுமக்களால் பழிக்கப்படுவது பெற்றோரின் தவிப்புக்கு எதிராகப் பெண்ணை விமர்சிக்கிறது.

## வேந்தன் கோணத்தில் பெண்

வேந்தர் பெண்ணைப் போகப்பொருளாகப் பார்த்ததால் வயதுப்பொருத்தம் அவர்களுக்குத் தேவைப்படவில்லை. பெரும்பொருளைக் கொடுப்பதாகச் சொல்லிப் பெண்ணை விலைபேசினர். வேளிரையும் கிழாரையும் அடக்கப் பெண் கருவியாக்கப்பட்டாள். அதனால் தான் கேட்டபெண் மறுக்கப்படும் போது,

அவர்களுக்குக் கௌரவப் பிரச்சினை ஏற்பட்டுப் போருக்கு எழுந்தனர். ஊர்களைத் தீக்கிரை ஆக்கித் தம் ஆட்சிப்பரப்பை விரித்தனர். இச்சமூக நிலையால் பெண் பாதுகாக்கப்பட வேண்டியவள் ஆனாள்.

தொன்மையான குறுநில மன்னன் மகளைக் கிழட்டு வேந்தன் கேட்டமை புறம்.353ல் 'மாமுது' என்ற சொற்றொடர் மூலம் எள்ளளவும் ஐயமின்றித் தெளிவாக உள்ளது.

திணைமாந்தனாகிய கிழானிடம் வேந்தன் பெண் கேட்டது புறம்.349ம் பாடலாகும். அடிக்குறிப்புச் சிக்கல் கிழான் மகள் மறுத்தது எனக் கூறுகிறது. கேட்டபெண் கிடைக்காதபோது; வேந்தர் மக்கள் வாழும் ஊர்களைத் தீக்கிரையாக்கிக் கழனிகளிலும் நீர்நிலைகளிலும் யானைகளை நிறுத்திப் பாழாக்கி மரங்களில் பிணித்து வேரோடு சாய்த்து நாசமாக்கினர் என்பதைப் புறம்.336, 340, 341, 344, 345, 346, 347, 348, 349, 351, 354 ஆகிய அனைத்துப் பாடல்களும் காட்டுகின்றன.
வேந்தர் மக்கள் வாழுமிடங்களை அழித்ததைத் தொகை நூல்கள் விரிவாகப் பேசுகின்றன. இமயவரம்பன் வேளிரின் உழைப்பைத் தீக்கிரை ஆக்கியமை பற்றிப் பல பாடல்கள் பேசுகின்றன (பதிற்., 2007. ப.16-56, பா13,15,19). பாண்டியன் நெடுஞ்செழியன் 'நாடுகெட எரி பரப்பி'க் குறுநிலமன்னரின் வயல்களையும் குடியிருப்புகளையும் அழித்தான் (பத்துப்பாட்டு தொகுதி II, 2008. மதுரைக்காஞ்சி 126,151-176, ப.24). கரிகாலன் மன்னர் விளைநிலத்தை நாசமாக்கியமையும் விரிவாகவே பேசப்படுகிறது (பட்டினப்பாலை; 235-258).

தாம் வெற்றிகண்ட மன்னரைக் கொள்ளையடித்து விட்டுவிட்டால் அவர் மீண்டும் தலையெடுத்து விடுவார் என்பதால்; முற்றிலும் அழியும்படித் தீக்கிரையாக்கினர் என்று காரணத்தை விளக்கமாக உரைக்கிறார் பெருங்குன்றூர் கிழார். பதிற்.81ல் இளஞ்சேரலிரும்பொறை அரசரை வெற்றி பெற்ற பின்னும் 'நாடு அடிப்படுத்தலிற் கொள்ளை மாற்றி அழல்வினை அமைந்தா'ன் என்கிறார். இச்சமூகநிலை அன்றைய பெண்ணின் பெறுமதியை வரையறுத்தது. ரெமன்செல்டன் ஆண்பெண் பால் வேறுபாட்டிற்குக் காரணமாகக் கூறும் ஐந்து கூறுகளுள் சமூகச்சூழலும் ஒன்றென ஆய்வாளர் காட்டுகின்றனர் (பஞ்சாங்கம், 1994).

## மாற்றுக்கருத்துகள்

## தன்னுரிமைப் பெண்டிர்

பாசத்தின் மறுவுருவாக இருப்பினும் மகளின் வாழ்க்கை பற்றி முடிவெடுப்பதில் தாய்க்குத் தந்தையோடு ஒத்த சிறப்பிடம் இருந்தது. 'பெண்ணுக்குக் கிடைத்துள்ள அடையாளம் ஆணின் ஆதிக்க மொழியின் புனைவு' என்ற பெண்ணியவாதம் (பஞ்சாங்கம்,1999). பண்டைத் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தாயருக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை.

புறம்.346ல் அண்டர்மகன் குறுவழுதியார் பாடும் தாய் தாய்மை மீதூர மகளுக்குப் பசிக்கிறதா இல்லையா எனத் தெரியாது என்கிறாள். இது ஆணாதிக்கம் அவளுக்குக் கொடுத்த ஒருபாதித் தோற்றம் மட்டுமே ஆகும். வேந்தனுக்கு மகள்மறுக்கும் தாயை அறமில்லாதவள் என்றும் பண்பில்லாதவள் என்றும் பரணர் புறம்.336ல் கடுமையாக வசைபாடுகிறார். அத்தாய் தானே திடமாக முடிவெடுக்கும் உரிமையும் திறனும் பெற்றவளாக இருந்ததால்தான் மகளின் எதிர்காலவாழ்விற்கு முதலிடம் கொடுத்துப் புலவரின் வசையைப் பொருட்படுத்தாது வாய்திறவா வீரர் மனநிலையையும் எதிர்த்து நிற்கிறாள்.

தொகையிலக்கியம் தோன்றிய காலத்தில் வாழ்வின் பிற நிலைகளிலும் பெண்டிர் தாமே முடிவெடுக்கும் தகுதியும் திறனும் பெற்று இருந்தனர். கண்டீரக்கோவின் மனைவி தன் கணவன் பணிநிமித்தம் அகன்று சென்றிருந்த போது புலவோர்க்கு யானைகளைப் பரிசாக அளித்ததைப் புறம்.151 புகழ்கிறது. பெருஞ்சித்திரனார் மனையாளிடம் ‘என்னொடும் சூழாது’ நீயே எல்லோர்க்கும் கொடு எனச் சொல்வது (புறம்.பகுதி I, 2007. ப.349, பா163) பெண்களின் தன்னுரிமையை இயல்பாக ஏற்றுக்கொண்ட எதிர்பாலினத்தவர் மனநலத்தைக் காட்டுகிறது.

ஔவையார் தனிப்பெரும் ஆளுமையாகத் திகழ்ந்தார். பெண் எழுத்து, பெண் மொழிக்குச் சான்றாக ஔவையார் பாடல்களைச் சுட்டுவர் (அரங்க மல்லிகா, 2008, கண்மணி கணேசன், 2018). காக்கைப்பாடினியாரின் பெண்மொழி, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை ‘ஆன்றோள் கணவ’ என்று விளிப்பதிலும் பதிற்றுப்பத்தைப் பாடிய ஏழு ஆண்பாற் புலவரினின்றும் மாறுபட்டுச் சேரன்மனைவியைச் சித்தரிப்பதிலும் வெளிப்படுகிறது (கண்மணி கணேசன், 2018).

சங்ககாலப் பெண்களிடம் தன்னுரிமை இருந்தது எனப் பிறரும் எடுத்துக்காட்டுகின்றனர் (குமரன், 2016).

## மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் கற்பனையா?

க.கைலாசபதியின் ‘வம்பவேந்தர் புகழ்பாடும் புலமை மரபினரின் ஒருவகைப் பிரச்சார உத்தியே மகட்பாற் காஞ்சிப் பாடல்கள்’ (1999) என்ற கருத்துரைக்கு விளக்கம் அளிக்க வேண்டிய தேவை உள்ளது. கிள்ளி என்ற சோழனின் பெயர் இடம்பெறுவதால் புறம்.355 கூறும் செய்தி சோழன் பெண்கேட்டமை எனத் துணிய முடிகிறது. புறம்.352ல் உறந்தை அன்ன உரைசால் நன்கலத்தைப் பெற மறுத்துப் போருக்குத் தயாராகின்றனர் தமையன்மார் என்பதும் கேட்ட வேந்தன் சோழன் என்பதைக் குறிப்பாகச் சொல்கின்றது.

மகளைக் கேட்டு மன்னனின் புரிசையில் ஏணி சார்த்திப் போருக்குத் தயாரான வேந்தனால் ‘வயலமர் கழனி சூழ்ந்த ஊர் கவினழிய’ப் போகிறது எனப் பரணர் புறம்.343ல் வருந்துகிறார். புறம்.336, 341, 348, 352, 354 ஆகிய பாடல்களில் பரணர் அதே செய்தியைப் பலபடப் புனைகிறார். முசிறிக்கு ஈடான செல்வத்தைப் பரிசமாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறான் வேந்தன் என்ற செய்தி பெண்கேட்டவன் சேரன் என்ற கருத்தை வலுப்படுத்துகிறது. பதிற்.43ல் செங்குட்டுவன் 'பல நாட்டைத் தொல்கவின் அழித்தவன்' என்றும் பதிற்.48ல் பகைவரின் 'முனைசுடு கனையெரி'யால் வாடிய மாலையை அணிந்தவன் என்றும் அவரே பாடியுள்ளார். அவரது காலத்தில் வேந்தன் பெண் கேட்பதும் மன்னன் மறுப்பதும் வேந்தன் ஊரை அழிப்பதும் அடிக்கடி நிகழ்ந்ததென்ற முடிவு கிடைக்கிறது.

புறம்.337ல் நெல்லரிசிக் கவளத்தை உண்ணக் கொடுத்துக் காவெங்கும் யானையால் சூழ்ந்த வேந்தர்க்கு மகளைத் தர மறுத்து மனையில் செறித்த மன்னன் பற்றிக் கபிலர் பாடுகிறார். இவர் பதிற்.ஏழாம் பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடியவர். இங்குப் பெண் கேட்டவன் சேரன் என்று நாமாகச் சொல்ல இயலாது. இரண்டையும் பாடியவர் கபிலர் ஆதலால் அவரது காலச் சமூகத்தில் மன்னர் எதிர்கொண்ட சிக்கல் தெளிவாகிறது.

மன்னன் தன் மகளை வேந்தனுக்குக் கொடுக்க மறுத்ததாக புறம்.342ல் அரிசில் கிழார் புலம்புகிறார். இவரே பெருஞ்சேரல் இரும்பொறையைப் பதிற்.71ல் 'ஊர் எரி கவர உருத்தெழுந்து போர்சுடு கமழ்புகை மாதிரம்

மறைப்பச் செயல்பட்டதாகப் புகழ்கிறார். இங்குப் பெண் கேட்டவன் பெருஞ்சேரலாதன் என முடிபாகக் கூற முடியாதெனினும் பாடியவர் அரிசில்கிழாரே ஆதலால் அவரது காலச் சமூகச்சூழல் வேந்தர், வேளிர் இடையில் ஏற்பட்ட சிக்கல் விளக்கம் பெறுகிறது.

## முடிவுரை

வேந்தர் பெண்ணைப் போகப் பொருளாகப் பார்த்தனர்; விலை பேசினர்; வேளிரையும் கிழாரையும் அடக்கக் கருவியாக்கினர். இதனால் பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர் ஆயினர். மகட்பாற்காஞ்சிப் பாடல்களில் இடம்பெறும் பெண்டிர் தாய், மகள் என இரு நிலையினர் ஆவர். மணவினைக்குக் கேட்கப்படும் பெண்கள் விளையாட்டுப் பருவத்திலிருந்து மங்கைப் பருவம் வரை பல வயதினர். பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் தாயர் தன்னுரிமையோடு இருந்தனர். மகளை விட்டுக் கொடுக்கக் கூடாதென்ற கொள்கை வேளிரிடமும் திணைமாந்தரிடமும் இருந்தது. அள்ளூர் நன்முல்லையார் பெண்மொழியின் பிரதிநிதி ஆகிறார். பரணர் ஆணாதிக்கப் பிரதிநிதியாக உள்ளார். பாதிக்கப்படும் மக்கள் பெண்ணை அணங்கு என விமர்சிக்கின்றனர். மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் கற்பனை அல்ல வேந்தர்க்கும் பிறர்க்கும் இடையில் ஏற்பட்ட சிக்கல், பெயர் சுட்டாத வரலாறு.

## References

*Aingurunooru*, (2009). Chennai: *kazhaka veliyeedu*

*Akanaanooru kalirriyaanai nirai*, (2009). Chennai: *kazhaka veliyeedu*

*Akanaanooru manimidai pavalam*, (2007). Chennai: *kazhaka veliyeedu*

*Aranga Malliga*, (2008). *Pennin Veliyum Iruppum*, Chennai: New Century Book House

*Kailasapathi,k.*,(1999), *Pandaith thamizhar vaazhvum vazhipaadum*, Chennai: *Kumaran Pathippakam*

*Kanmani Ganesan,S.*, (2018, August). http://mymintamil.blogspot.com/2018/08/blog-post_8.html

*Kanmani Ganesan,S.*, (2019, July). Journal of Tamil Peraivu, eISSN: 2636-946X (An Analytical Study of the Songs of Makatpaarkaanjiththurai)

*Kanmani Ganesan,S.*, (2018, July29). http://mymintamil.blogspot.com/2018/07/blog-post_29.html

*Kumaran*,S., (2016). "*Sanga Ilakkiyaththil Thannurimaip Penkal*" (pp.140-146). *Pen Padaippilakkiyam Aayvuk Katturaith Thokuppu*, Madurai: Kavin Achchakam

*Narrinai*, (2007). Chennai: *kazhaka veliyeedu*

*Panjaangam,ka., Pennenum padaippu,* (1994). Chennai: *Selvan Pathippakam*

*Panjaangam,ka*., (1999). "*Pen Mozhi Punaivu"*, (pp.66-74). Chennai: *Kaavya*

*Paththuppaattu* part ii, (2008). Chennai: *kazhaka veliyeedu*

*Pathirruppaththu*, (2007). Chennai: *kazhaka veliyeedu*

*Puranaanooru* part i&ii, (2007). Chennai: *kazhaka veliyeedu*

*Usharaani,Ma.*, (2020). "*Alloor Nanmullaiyaar Paadalkal Kaattum Sangakaala Makalir Nilai*" https://www.geotamil.com/index.php?option=com_content&view=category&id=65:2014-11-23-05-26-56&layout=blog&Itemid=82